திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிறுவனத்தில் கூட்டாளிகளால் ஏற்படக்கூடிய தகராறுல் அடிக்கடி இந்த நிறுவனம் மூடப்பட்டிருப்பதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது போல், இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த தொழிலாளர்கள் முன்வந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது ஆகவே, தொழிலாளர்களே ஏற்று நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுகினல், அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கோவை மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் லெட்சுமி மிஷன் ஒர்க்கஸ் நிறுவனத்தில் கதவடைப்பு காரணமாக தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

* திரு. ஆ. நடராசன்
திரு. க. சுப்பு
திரு. ஆர். மணிமாறன்
} பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் பெரியநாய்க்கன் பாளையத்திலுள்ள லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனம் கதவடைப்புக் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோவை லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் சுமார் 2,500 தொழிலாளர்களை உடையது. இந்தத் தொழிலாளர்களுக்காக பத்து தொழிற்சங்கங்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. இவைகளில் ஏழு தொழிற்சங்கங்கள்

ஊதியத்தோடு கூடிய சிறுவிடுப்பு, வீட்டு வாடகைப் படி, ஊக்கப்படி திட்டத்தைத் திருத்தி அமைத்தல், தொழிலாளர்களின் வேலைநீக்கம், கூட்டுறவு அங்காடி மற்றும் கடன் வழங்கும் நிலையம் அமைத்தல், ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 16—6—1977 முதல் வேலைநிறுத்தம் செய்ய விரும்புவதாக 1—6—1977 தேதியிட்ட வேலை நிறுத்த அறிவிப்பை நிர்வாகத்திற்கு அளித்தனர். நிர்வாகமானது தொழிற்தகராறு எழுப்பாத எஞ்சிய மூன்று தொழிற் சங்கங்களுடன் சிறுவிடுப்பு பற்றிய கோரிக்கையில் உடன்பாடு செய்து கொண்டதைக் காரணம் காட்டி தொழிலாளர்கள் 2--6--1977 அன்றே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். கோவை இரண்டாவது சரக தொழிலாளர் துறை அலுவலர் இத்தொழில் தகராறில் 3—6—1977 அன்றும் 7--6--1977 அன்றும் சமாசப் பேச்சு வார்த்தை நடத்தினர். 8—6—1977 அன்று நிர்வாகம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பட்டுவாடா செய்ய முயன்றபோது, தொழிலாளர்கள் பொருட்களை அப்புறப்படுத்துவதைத் தடுத்தனர். 11—6—1977 அன்று மே மாதத்திய சம்பளம் கொடுக்காமலேயே, நிர்வாகம் கதவடைப்பு செய்தது. 6--7--1977 மற்றும் 7--7--1977 நாட்களில் சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பும், 8—7—1977 அன்று தொழிலாளர் நல அமைச்சர் முன்னரும் மேலும் சமாசப் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

29-7-1977 முதல் நிர்வாகத்தின் தலைவர் வீட்டின் முன்னால் தொழிலாளர்கள் எழுவர் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னை தொழிலாளர் துறை தனி துணை ஆணையர் கோயமுத்தூரில் 30—7—1977 முதல் சமாசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றார். இதுபற்றி ஒரு சுமுகமான முடிவு விரைவில் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. சுப்பு: பொதுவாக இப்படிப்பட்ட பிரச்னைகள், நெருங்கி பேசமுடியாத அளவுக்கு காவல்துறையினர் அந்த நிர்வாகத்தின் தலைவரின் பங்களாவின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், இன்றைய தொழிலாள நலத்துறை அமைச்சர், அன்றைய தொழிற்சங்கத் தலைவராக இருந்தபோது கொடுத்த

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதாகவும் கூறப்படு கிறதே, இவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல் நிறுவன அதிபர் இல்லத்திற்கு முன்னால் தொடர் உண்ணாவிரதம் நடக்கும்போது அதை அனுமதித்திருக்கிறோம். அதே நேரத்தில் 'நத்திங் அன்டுவர்டு ஷுட் ஹேப்பன்'. அதே நேரத்தில் அங்கே தவறான காரியங்கள் நடந்துவிடக் கூடாது. எனவே எச்சரிக்கையாகவும் பாதுகாப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. நடராசன்: கடந்த மூன்று மாத காலமாக தொழிலாளர்கள் சம்பளம் இல்லாமல் மிகுந்த தொல்லைகளுக்குட் பட்டிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பிரச்னையை விரைவாக முடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மே மாத ஊதியமாவது கொடுக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். இதற்காகத் தான் இங்கிருந்து ஏற்கனவே டெபுடி கமிஷனர் ஆப் லேபர் திரு. லட்சுமணன் மிக அனுபவம் வாய்ந்தவர், கோவைப் பிரச்னையை நன்றாகத் தெரிந்தவர் என்ற காரணத்தால் இங்கிருந்து அவரை அனுப்பி நான்கைந்து நாட்கள் தங்க வைத்து பேச்சு வார்த்தைகள் நடத்திப் பார்த்தோம், இது வெற்றி பெறவில்லை. நேற்றுக் கூட பேசியிருக்கிறோம். நம்பிக்கையோடு தான் மனிதர்கள் வாழ்கிறார்கள். கூடுமானவரையில் சுமுகமான உடன்பாடு ஏற்படும் என்று கருதுகிறோம், அடுத்து அவர்கள் முதலமைச் சரையும் காண்பதாக இருக்கிறார்கள். எனவே உடனே இந்த பிரச்னை தீர்ந்து விடும் என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, நிர்வாகத்தை 'ஜஸ்டிஸ் டிலேட் இஸ் ஜஸ்டிஸ் டினைடு' என்பது போல் காலம் கடத்தினால் தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை வற்புறுத்த

இயலாது, சக்தியற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். இடைக் காலத்திலாவது தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ள அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா? அதற்காக அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கேட்டதற்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாள் கடத்துவதன் மூலமாக தொழிலாளர்களுக்குச் சிக்கல் ஏற்படவோ, அவர்களுக்குத் தொல்லை ஏற்படவோ, அவர்கள் சோர்ந்து விடவோ, இந்த அரசு நிச்சயமாக உதவி செய்யாது, அவர் களுக்குத் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தால் இந்த இன்டஸ்ட்ரியை அரசு தேசியமயமாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே,

This itself is a policy matter and a decision has to be taken by the Cabinet.

4. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(1). மானியக் கோரிக்கைகள் மீதான ஆய்வுரைகள் ஒருநாள் முன்னதாகக் கொடுக்கப்படாதது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1977-78ம் ஆண்டிற் கான வரவு செலவு திட்டம் — மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானிய கோரிக்கை எண். 1 நில வரித்துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்:

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கைகள் இன்றைக்கு நூறு பக்கங்களுக்கு மேலாக இருக்கின்றன. நேற்று இரவு பத்து மணிக்கு மேல் மானியக் கோரிக்கைகள் மீதான ஆய்வுகள் வந்திருக்கின்றன. இதைப் படிப்பதை விட்டு பக்கம் பக்கமாகப் புரட்டினாலும் கூட ஒரு மணி